தினமணி

# ஒரே மாதத்தில் குலை தள்ளிய அதிசய வாழை

First Published : 18 Jun 2010 12:00:00 AM IST



திருவள்ளூர், ஜூன். 17: திருவள்ளூரில் ஒரே மாதத்தி குலை தள்ளிய அதிசய வாழையை அப்பகுதி மக்கள் வியப்புடன் பார்த்துச் செல்கின்றனர்.

÷திருவள்ளூரை அடுத்த காக்களூர் ஊராட்சிக்குட்பட்ட வி.எம். நகர் கண்ணதாசன் தெருவில் வசிப்பவர் மதன். இவர் ஒரு மாதத்துக்கு முன் ஊத்துக்கோட்டை அருகே உள்ள கிராமத்தில் 4 வாழைக் கன்றுகளை வாங்கி வந்து வீட்டின் பக்கவாட்டுப் பகுதியில் நட்டுவைத்தார்.

÷தற்போது அந்த வாழைக் கன்றுகள் ஒன்றரை அடி உயரம் மட்டுமே வளர்ந்துள்ளன. அதில் ஒன்று பூ பூத்து குலை தள்ளியுள்ளது.

நட்ட ஒரு மாதத்தில் ஒன்றரை அடி உயர வாழைக் கன்று குலை தள்ளியது அப் பகுதி மக்களிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அதிசய வாழையை அனைவரும் பார்த்து செல்கின்றனர்.

**சிறுதேயிலை விவசாயிகளுக்கு மானியம் வழங்கக் கோரிக்கை**

First Published : 17 Jun 2010 10:49:03 AM IST

உதகை,ஜூன் 16: தேயிலை விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ள தேயிலை விவசாயி களை காப்பாற்ற சிறுதேயிலை விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும் என்று மலை மாவட்ட சிறுதேயிலை விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து சங்கத் தலைவர் தும்பூர் போஜன், பொது செயலாளர் ஐ.போஜன் ஆகியோர் மாவட்ட ஆட்சியருக்கு புதன்கிழமை அனுப்பியுள்ள கோரிக்கை மனு:

நீலகிரி மாவட்டத்தில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு மற்றும் குறு தேயிலை விவசாயிகள் உள்ளனர். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு தேயிலை விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக மாவட்ட மக்களின் வாழ்க்கையே கேள்விக்குறியானது. அதை தொடர்ந்து விவசாயிகளின் நலன் கருதி அப்போதைய தமிழக அரசு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானியம் வழங்கி ஊக்குவித்தது.

மேலும் தேயிலைக்கு உரிய விலை கிடைக்கும் விதமாக நடவடிக்கை மேற்கொண்ட தேயிலை வாரியம் கலப்படத் தேயிலை ஒழிப்பு, தரமான தேயிலை உற்பத்தி குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த முகாம்கள் நடத்தியது உள்ளிட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனால் கடந்த 5 ஆண்டுகளாக பசுந்தேயிலைக்கு ஓரளவு கட்டுபடியான விலை கிடைத்து வந்தது.

இந்நிலையில் கடந்த மூன்று மாதங்களாக பசுந்தேயிலை விலை மீண்டும் அதிகளவு குறைந்துள்ளது. தற்போது விவசாயிகள் தங்கள் குழந்தைகளை பள்ளி மற்றும் கல்லூரிகளில் சேர்க்க வேண்டியிருப்பதால் தேயிலைக்கு உரிய விலை கிடைக்காமல் தங்கள் தேயிலைத் தோட்டங்களை கந்து வட்டிகாரர்களிடம் அடகு வைக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், வழக்கமாக ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கிடைக்க வேண்டிய பசுந்தேயிலை மகசூலும் பருவ மழை பொய்த்ததன் காரணமாக தற்போது குறைந்துள்ளது. இந்நிலையில் தேயிலை விலையும் குறைந்திருப்பது தேயிலை விவசாயிகளின் வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, பசுந்தையிலைக்கு உரிய விலை கிடைக்க சம்பந்தப்பட்டத் துறையினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேணடும். மேலும், கடந்த தேயிலை விலை வீழ்ச்சியின் போது பாதிப்பிலிருந்து சிறு மற்றும் குறு விவசாயிகளை காப்பற்ற மானியம் வழங்கியதைப் போல தற்போதும் மானியம் வழங்க வேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**தமிழகத்தில் 120 ஒருங்கிணைந்த பால் பண்ணைகள் அமைக்க திட்டம்: பால் வளத் துறை அமைச்சர்**

First Published : 17 Jun 2010 11:54:05 AM IST

Last Updated : 17 Jun 2010 01:06:44 PM IST

நாகர்கோவில், ஜூன் 16: தமிழகத்தில் மகளிர் குழுக்கள் மூலம் 120 ஒருங்கிணைந்த பால் பண்ணைகள் அமைக்கப்படவுள்ளதாக பால் வளத் துறை அமைச்சர் உ. மதிவாணன் தெரிவித்தார்.
நாகர்கோவிலில் புதன்கிழமை நடைபெற்ற பால் உற்பத்தியாளர்களுக்கு விளிம்புத் தொகை வழங்கும் விழாவில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் மேய்ச்சல் நிலப்பரப்பு குறைந்து வருவதை கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த பால் பண்ணைகள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத் திட்டத்தின்படி 25 மகளிர் கொண்ட குழுக்களுக்கு 50 சதவிகித மானியத்தில் கறவை மாடுகளை வாங்கி, வளர்க்க அரசு உதவி செய்கிறது. இந்த பால்பண்ணைக்கான கொட்டகைகளையும் அரசு அமைத்துக் கொடுக்கிறது.

ஏற்கெனவே மாநிலத்தில் 50 இடங்களில் இதுபோன்ற பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் 120 பால் பண்ணைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடையால், அகஸ்தீஸ்வரம் ஆகிய இடங்களில் இந்த பண்ணைகள் உருவாக்கப்படும்.

அதிக பால் கொடுக்கும் உயர் ரக, கலப்பின மாடுகள் வளர்ப்புக்கும் அரசு உதவி செய்கிறது. மாநிலம் முழுக்க கறவை மாடுகளை வளர்ப்போருக்கு 50 சதவிகித மானியத்தில் தானியங்கள் அடங்கிய பாக்கெட்டுகளும், புரோட்டீன் உணவுப் பாக்கெட்டுகளும் வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் எப்பகுதியிலும் பால் பற்றாக்குறை இல்லை. அந்தந்த பகுதி மக்களின் பால் தேவையை பூர்த்திசெய்யும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பற்றாக்குறை ஏற்படும் மாவட்டங்களுக்கு அருகேயுள்ள மாவட்டங்களில் இருந்து பால் கொண்டு செல்லப்படுகிறது.

கொள்முதல் செய்த பால் கெட்டுப்போகாமல் இருக்க, அந்தந்த பகுதிகளில் குளிர்பதன கிடங்குகளில் வைக்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

ஏற்கெனவே 160 இடங்களில் இந்தவகையில் கட்டமைப்புகள் உள்ளன. மேற்கொண்டு 12 ஏற்படுத்தப்படவுள்ளன.

தேவையிருக்கும் இடங்களிலும் கூடுதலாக குளிர்பதன வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தமிழகத்தில் கறவை மாடுகள் உள்ளிட்ட கால்நடைகளின் வளத்தைப் பெருக்கவும், அதிக பால் உற்பத்திக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை, தமிழக முதல்வர் கருணாநிதியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகத்திலிருந்து கேரளத்துக்கு கறவை மாடுகள், எருமைகள் கொண்டு செல்லப்படுவதை தடுக்க முடியாது என்றார் மதிவாணன்.

மாநில சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் என். சுரேஷ்ராஜன், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றிய பொது மேலாளர் சி. ராஜூ உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

**விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு**

தர்மபுரி: பென்னாகரம் உழவர் சந்தையில் தோட்டக்கலை துறை மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் நுண்ணிய பாசனம் குறித்து விவசாயிகளக்கு பயிற்சி வகுப்பு நடந்தது. முன்னோடி விவசாயி இளஞ்செழியன் தலைமை வகித்தார். நுண்ணிய பாசன அமைப்பது மூலம் கிடைக்கும் பலன்கள், அவசியம் மற்றும் அரசு மானிய திட்ட உதவிகள் குறித்து

தோட்டக்கலை உதவி இயக்குனர் முகுந்தன் விளக்கினார். திட்ட வழிமுறைகள் குறித்து தோட்டக்கலை உதவி அலுவலர் ராஜன் விளக்கினார்.

**அவல்பூந்துறையில் ரூ.44.50க்கு கொப்பரை தேங்காய் கொள்முதல்**

ஈரோடு: அவல்பூந்துறை புதிதாக திறக்கப்பட்ட அரசு கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையத்தில் கிலோ 44.50 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது.ச ஈரோடு மாவட்ட தென்னை விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று ஈரோடு அருகே அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் கொப்பரை கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. மாவட்டத்தில் பல்வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நடக்கும் ஏலத்தில் அதிகபட்சம் 35 ரூபாய்க்கு மட்டுமே விலை போகிறது. ஆனால், மத்திய, மாநில அரசுகள் ஆதார விலைத் திட்டத்தின் கீழ், இங்கு கொப்பரை தேங்காய் கிலோ ஒன்றுக்கு 44.50 ரூபாய்க்கு தேசிய கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. கொள்முதல் நிலையத்தை திறந்து வைத்து கலெக்டர் சுடலைக்கண்ணன் பேசியதாவது:

அரசு வேலை, கம்பெனி வேலைக்கு மூன்று தலைமுறையாகத்தான் மக்கள் செல்கின்றனர். அதற்கு முன் மக்கள் அனைவரும் விவசாயத்தை சார்ந்திருந்தனர். பாரம்பரியமிக்க தொழிலான விவசாயம், கால சூழ்நிலையால் சுருங்கி விட்டது. வாழ்வின் ஆதாரமான விவசாயத்தை நாம் புறக்கணிக்க கூடாது. வேளாண் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கையை ஏற்று கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார். கொள்முதல் நிலையத்தில் விவசாயிகள் வைத்திருந்த கொப்பரை தேங்காயை கலெக்டர் பார்வையிட்டார். "வளாகத்தில் உள்ள எடைத்தளம் பழுதாகி இருப்பதால், எடை போட முடியவில்லை' என, விவசாயிகள் குற்றம்சாட்டினர். "நடவடிக்கை எடுக்கப்படும்' என, கலெக்டர் உறுதியளித்தார். மொடக்குறிச்சி எம்.எல்.ஏ., பழனிசாமி, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் சரவணன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் முத்துகுமாரசாமி, பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க தனி அலுவலர் வசந்தி உள்பட பலர் கலந்து கொண்டனர். திறப்பு விழா நடந்த முதல் நாள் ஐந்து விவசாயிகள் 6,150 கிலோ கொப்பரை தேங்காய் கொண்டு வந்திருந்தனர்

**தேங்காய் பருப்பு ரூ.1.42 விலை சரிவு**

கோபிசெட்டிபாளையம்: தேங்காய் பருப்பு வரத்து குறைந்த போதும், ஒரு ரூபாய் 42 பைசா விலை குறைந்தது.
கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் புதன்கிழமை தேங்காய் பருப்பு ஏலம் நடக்கிறது. நேற்று 240 மூட்டை பருப்பு ஏலத்துக்கு வந்தது. சென்ற வாரத்தை விட 33 மூட்டை குறைவாக வந்தது. கூடுதல் விலை கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆனால், கடந்த வாரத்தை

விட தேங்காய் பருப்புக்கு ஒரு ரூபாய் 42 பைசா விலை குறைந்தது. ஒரு கிலோ தேங்காய் பருப்பு அதிகப்பட்சமாக 33.85 ரூபாய், குறைந்தபட்சமாக 32.55 ரூபாய், சராசரியாக 34.89 ரூபாய்க்கு ஏலம் போனது. கோபி சுற்று வட்டாரத்தில் ஒரு வாரமாக குளிர்ந்த சீதோஷ்ணம் நிலவுகிறது. உடைக்கப்பட்ட தேங்காய் பருப்பை முழுமையாக காயவைக்க முடியவில்லை. இதுவே, தேங்காய் பருப்பு வரத்து குறையக் காரணம். ஆனால், கூடுதல் விலை எதிர்பார்த்த விவசாயிகள் ஏமாந்து போயினர்.

**குருத்து புழு கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு**

பள்ளிபாளையம்: "கரும்பு பயிரில் இளங்குருத்து புழுவை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை பின்பற்ற வேண்டும்' என, பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: கோடை பருவத்தில் கரும்பில் இளங்குருத்து புழு தாககுதல் காணப்படும். வெள்ளை நிற புழுக்கள் இளம்பயிரின் குருத்தை துளைத்து சாப்பிடுவதால், நடுக்குருத்து காய்ந்துவிடும். அதனால், மகசூலும் பாதிக்கும். இளங்குருத்து புழுவை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளே சிறந்தது. கரும்பு நடவு செய்த பார்களில்10 செ.மீ., உயரத்துக்கு சோகை பரப்ப வேண்டும். வேம்பு மருந்து ஏக்கருக்கு 200 மி.லி., வீதம் தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு எண்டோசல்பான் மருந்து 400 மி.லி., வீதம் தெளிக்க வேண்டும். நடப்பு பருவத்தில் கரும்பு பயிர்களில் இளங்குருத்து புழு தாக்குதலை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை மூலம் கட்டுப்படுத்தி மகசூல் இழப்பை தவிர்க்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வனப்பரப்பு அதிகரிக்க 4 லட்சம் மரக்கன்று வனச்சரக வனவர் தகவல்**

மோகனூர்: ""மாவட்டத்தில் வனப்பரப்பை அதிகரிக்க பட்டா மற்றும் தரிசு நிலங்களில் மரக்கன்று நட வேண்டும். அதற்காக 4 லட்சம் மரக்கன்றுகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது,'' என, வனச்சரக வனவர் வெங்கடாஜலம் பேசினார்.

நாமக்கல் உழவர் பயிற்சி நிலையம் சார்பில், விவசாயிகளுக்கான கிராம அடிப்படை பயிற்சி முகாம், மோகனூர் அடுத்த ராசிபாளையத்தில் நடந்தது. உழவர் பயிற்சி நிலைய வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியம் தலைமை வகித்து, முகாமை துக்கி வைத்தார்.

நாமக்கல் வனச்சரக வனவர் வெங்கடாஜலம் பேசியதாவது: 2010-11ம் ஆண்டு தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புத் ட்டத்தின் கீழ், விவசாய நிலம் மற்றும் தரிசு நிலங்களில் இடைநடவு மற்றும் கரைநடவு மரம் வளர்க்க தேக்கு, மலைவேம்பு மற்றும் குமிழ் ஆகிய மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு அதிக பட்சமாக 2 ஹெக்டேர்

அளவுக்கு 1,000 நாற்றுகள் வழங்கப்பட உள்ளது.

ஏக்கருக்கு இடைநடவுக்கு 200 கன்றுகளும், கரைநடவுக்கு 50 கன்றுகளும் வழங்கப்படும். இத்திட்டத்துக்காக 4 லட்சம் மரக்கன்றுகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. நடவு செய்து ஓராண்டுக்கு பின் உயிருள்ள கன்றுகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். மொத்த நிலப்பரப்பில் 33 சதவீதம் வனப்பகுதியாக இருக்க வேண்டும். மாவட்டத்தை பொறுத்தவரை 19 சதவீதம் மட்டுமே வனங்கள் உள்ளன. நல்ல மழை பெறவும், சுற்றுச்சூழலை சமன்பாட்டில் நிலை நிறுத்தவும் வனங்கள் அவசியம். அதற்காக கொண்டு வந்த திட்டம்தான் ஒரு கோடி மரம் வளர்ப்புத்திட்டம். இத்திட்டத்தின் கீழ் லட்சக்கணக்கான மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. விவசாயிகள் அருகில் உள்ள வனத்துறை அலுவலரை தொடர்பு கொண்டு பெயரை பதிவு செய்து இலவசமாக மரக்கன்றுகள் பெற்று வளர்த்து வனப்பரப்பை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். வேளாண் காப்பீட்டுத்திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கணபதி, வேளாண் அலுவலர் சுதா, மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் ஜெயக்குமார், தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன், வேளாண் வணிக அலுவலர் கென்னடி, கால்நடை உதவி மருத்துவர் கோவிந்தராஜன், பட்டு வளர்ச்சித்துறை ஆய்வாளர் ஜான் பிரிட்டோ, முன்னோடி விவசாயி வேலுசாமி ஆகியோர் பேசினர். இதற்கான ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் அன்புச்செல்வி, துணை வேளாண் அலுவலர்கள் தங்கராசு, சந்திரசேகர் ஆகியோர் செய்தனர்.

**பயிர் சேதம் தவிர்க்க புதிய முறை உதவி இயக்குனர் யோசனை**

பள்ளிபாளையம்: "பயிர்களில் சேதம் ஏற்படுத்தும் பல்வேறு பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்த புதிய உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும்' என, பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: பயிர்களை தாக்கும் தீமை செய்யும் பூச்சிகளை முட்டை, புழு, கூட்டுப்புழுக்களை தாக்கும் ஒட்டுண்ணி மற்றும் இரை விழுங்கி எனப்படும் ஊன் உண்ணிகளை வயலில் பாதுகாப்பதோடு ஆய்வகத்திலிருந்து பெற்று வயலில் விட வேண்டும். பூச்சிகளை தாக்கும் என்.பி.வைரஸ் என்ற திரவத்தை தெளிப்பதால் பருத்தியை தாக்கும் காய்ப்புழு மற்றும் புரடீனியா புழு, நிலக்கடலை பயிரை தாக்கும் சிவப்பு கம்பளிப்புழு ஆகியவற்றை கட்டுப்படுத்தலாம்.

டிரைக்கோடெர்மா விரிடி என்ற எதிர்உயிரி பூசன மருந்தை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைப்பதால் நிலக்கடலையை தாக்கும் வேரழுகல் நோயை கட்டுப்படுத்தலாம். சூடோமோனஸ்ப்ளோரசன்ஸ் என்ற உயிரியில் காரணி மருந்தை ஒரு கிலோ நெல் விதைக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்து நாற்றுவிடுவதால் நெற்பயிரை தாக்கும் குலை நோயை கட்டுப்படுத்தலாம்.

கரும்பில் இடைக்கணு புழு தாக்குதலை கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா கைலோனிக்ஸ் என்ற முட்டை ஒட்டுண்ணியை கரும்பு நட்ட 120ம் நாளிலிருந்து 1சிசி வீதம் 6 முறை கட்ட வேண்டும். தென்னையில் வரும் கருந்தலை புழுவை கட்டுப்படுத்த பெத்தலிட், பிரகானிட் போன்ற ஒட்டுண்ணிகளை மரத்தின் மேல்புறத்தில் விட வேண்டும்.

நன்மை செய்யும் பூச்சிகளான சிலந்தி, குளவி, ஊசித் தட்டான், தரைவண்டு, பொறிவண்டு ஆகியவற்றை வயலில் பாதுகாத்து வரவேண்டும். நன்மை, பூச்சிகளை வயலில் அதிகரிக்க, தீமை பூச்சிகிளின் தாக்குதல் குறையும். தாவர பூச்சிக்கொல்லி மருந்தான வேம்பு கலந்த மருந்துகளையும் தெளிக்கலாம். புதிய நுட்பமான உயிரியல் கட்டுப்பாடு வழிமுறைகள் குறித்து மேலும் விபரங்களுக்கு, வேளாண் உதவி அலுவலர்களை அணுகலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அறுவடை சமயத்தில் பி.டி., பருத்தி செடிகள் கருகல் ஆண்டு தோறும் ஏமாறும் கொளத்தூர் விவசாயிகள்**

மேட்டூர்: சாகுபடி செய்த பி.டி., பருத்தி செடிகள் அறுவடை சமயத்தில் கருகியதால் கொளத்தூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் விரக்தியில் உள்ளனர். மேட்டூர் தாலுகா, கொளத்தூர் ஒன்றியத்தில் பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே நம்பியுள்ளனர். இங்குள்ள விவசாயிகள் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப, நெல், வாழை, கத்தரி, மிளகாய், பருத்தி, மஞ்சள் ஆகியவற்றை சாகுபடி செய்கின்றனர்.

பருத்தி சாகுபடியை பொறுத்தவரை பெரும்பாலான விவசாயிகள் எ.ஆர்.ஏ., எம்.சி.,5 மற்றும் நாட்டு ரக பருத்தியை பல ஆண்டுகளாக சாகுபடி செய்து வந்தனர். சில ஆண்டுகளுக்கு முன் எதிர்ப்பு சக்தி அதிகமுள்ள பி.டி., ரக பருத்தி விதை சந்தைக்கு விற்பனைக்கு வந்தது. "பேசிலஸ் துரியன்சீஸ்' என்ற பாக்டீரியாவின் ஜீன், பருத்தி விதை ஜீன் இணைத்து தனியார் நிறுவனங்கள் பி.டி.விதைகளை உற்பத்தி செய்கின்றன. இந்த விதை மூலம் வளரும் செடியிலும் நச்சுதன்மை பரவியிருப்பதால் பூச்சு தாக்குவதில்லை. காய்களும் நிறைய காய்த்து, அதிக லாபத்தை ஈட்டி தரும் என விதை நிறுவனங்கள் கூறியதால் பி.டி., பருத்தியை விவசாயிகள் சாகுபடி செய்தனர். கொளத்தூர் பகுதியில் பெரும்பாலான நிலங்களில் சாகுபடி செய்த பி.டி. ரக பருத்தி செடிகளில் காய்கள் வெடித்து பஞ்சு வெளிவரும் சமயத்தில் கருகி விவசாயிகளுக்கு பலத்த நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால், விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். இது குறித்து கொளத்தூர் செல்லியம்மன் உழவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் சுந்தரம் கூறியதாவது: கடந்த ஆண்டு எங்கள் பகுதியில் ஏராளமான விவசாயிகள் பி.டி., பருத்தி சாகுபடி செய்தனர். காய்கள் வெடிக்கும் சமயத்தில் செடிகள் கருகியதால் எதிர்பார்த்த மகசூல் கிடைக்காமல் விவசாயிகள்

நஷ்டமடைந்தனர். ஆனால், எங்கள் பகுதியில் போதிய விழிப்புணர்வு இல்லாத விவசாயிகள் பலர் பி.டி.பருத்தி சாகுபடி செய்தனர். மூலக்கடை, செட்டியூர், கண்ணாமூச்சி, நஞ்சுண்டபுரம், காவலாண்டியூர் சித்திரப்பட்டிபுதூர் பகுதியில் மட்டும் 100க்கும் மேற்பட்ட ஏக்கரில் சாகுபடி செய்த பி.டி.,பருத்தி செடிகள் காய்கள் வெடிக்கும் சமயத்தில் கருகி விட்டது. அதனால், ஒரு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வரை விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் கொளத்தூர் பகுதியில் அப்பாவி விவசாயிகள் பி.டி., பருத்தி விதைகளை வாங்கி சாகுபடி செய்து கடுமையான நஷ்டத்திற்கு ஆளாகின்றனர்.பி.டி., பருத்தி விதையால் அப்பாவி விவசாயிகள் ஏமாறுவதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாய விளைபொருள் சந்தைப்படுத்தல் மேம்பாடுக்கான ஒருநாள் கருத்தரங்கு**

கரூர்: விவசாய விளைபொருள் தர நிர்ணயம், தரம் பிரிப்பு, விற்பனைக்கான உட்கட்டமைப்பு வசதி உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துவதற்கான மத்திய அரசின் நபார்டு வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் குறித்த ஒரு நாள் கருத்தரங்கு கரூரில் நடந்தது. முன்னோடி வங்கி மேலாளர் சந்திரசேகர், நபார்டு வங்கி, டி.எம்.ஐ., முதுநிலை விற்பனை அலுவலர், வேளாண் தலைமை இயக்கனர், சரஸ்வதி வேளாண் அறிவியல் மையம் மற்றும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர். கலெக்டர் உமாமகேஸ்வரி பேசுகையில், "விவசாயத்தில் தற்போது உணவு தேவை பூர்த்தி செய்ய வேண்டிய நிலை மாறி, தரமான உணவு பொருட்களை அயல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைக்கு உயர்ந்துள்ளது. இதற்காக அரசும் பல புதிய திட்டங்களை செயல்படுத்துகிறது. கருத்தரங்கில் விவாதிக்கப்பட்ட திட்டத்தின் சிறப்பு அம்சங்களை கிராமங்களில் உள்ள விவசாயிக்கும், வங்கிகளுக்கும் எடுத்து செல்ல வேண்டும்," என்றார்.

திட்டத்தின் கீழ் பயன்பெறக்கூடிய விவசாயி பொருட்களை சேகரிப்பது, சுத்தப்படுத்துவது, தரச்சான்று பெறுவது, காய்களை கனியாக்க பயன்படும் அறை கட்டுவது, விவசாய பொருளின் தன்மை மாறாமல் சில்லரை மற்றும் மொத்த விற்பனைக்கு மதிப்பு கூட்டும் வசதிகளை ஏற்படுத்துவது உள்ளிட்ட வசதிகளை செய்வது குறித்து கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது. மேலும் 25 சதவீதம் மானியம் கிடைக்க கூடிய இந்த திட்டத்தில், விவசாய விற்பனை கூடங்களுக்கு தேவையான கடைகள், அலுவலகங்கள், பொருட்களை ஏற்றி இறக்குவதற்கான மேடை, வாகன நிறுத்த இடம், குடிநீர் மற்றும் சுகாதார ஏற்பாடு, எடைபோடும் மேடை உள்ளிட்ட உட்கட்டமைப்புக்கும் உதவி வழங்க உறுதியளிக்கப்பட்டது.விவசாயிகள், உற்பத்தியாளர், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சுயஉதவி குழுக்கள், கூட்டுறவு அமைப்புகள், கூட்டுறவு சங்க

விற்பனை மையங்கள் போன்றவை இந்த திட்டத்தில் மூலம் பயன்பெற்று விவசாய பொருள் சந்தைப்படுத்தும் விலையை அதிகரிக்க வல்லுனர்கள் கருத்து பதிவு செய்தனர்.

**இந்தியாவில் 2.2 சதவீதம் வனம் அழிப்பு: வனத்துறை அமைச்சர் பேச்சு**

பொள்ளாச்சி : ""இந்தியாவில் 2.2 சதவீதம் வனம் அழிக்க பட்டுள்ளது. இந்நிலையில் 17 சதவீதம் மக்கள் தொகை அதிகரித்துள்ளது. இதனால் இயற்கைக்கு பங்கம் ஏற்பட்டுள்ளது," என்று வனத்துறை அமைச்சர் செல்வராஜ் பேசினார்.ஆனைமலை புலிகள் காப்பகம் மற்றும் பொள்ளாச்சி சுபாஷ் கலைஅறிவியல் கல்லூரி இணைந்து, கல்லூரி வளாகத்தில் மரம் நடுவிழா நடத்தியது. வனத்துறை அமைச்சர் செல்வராஜ், மரக்கன்றுகளை நட்டி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.மரம் வளர்ப்பதன் அவசியம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கில், கல்லூரி தாளாளர் கார்த்திகேயன் வரவேற்றார். புலிகள் காப்பக கள இயக்குனர் பசவராஜு, உதவி வனப்பாதுகாவலர் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.வனத்துறை அமைச்சர் செல்வராஜ் பேசியதாவது: வனப்பகுதிகள் அதிகம் இருந்த காலத்தில் மக்கள் தொகை குறைவாக இருந்தது. மக்களின் பல்வேறு பயன்பாட்டிற்காக வனம் அழிக்கப்பட்டது. தற்போது மக்கள் தொகை அதிகரித்துள்ள நிலையில் வனத்தின் பரப்பு குறைவாக உள்ளது. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு, நச்சுப்புகை போன்றவற்றால் சுற்றுச்சூழல் மாசுபட்டுள்ளது. இதனால் புவி வெப்பமடைந்து வருகிறது. மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப வாகன பயன்பாடும் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 25 சதவீதம் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. வாகனங்களில் இருந்து வெளிப்படும் புகையால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. நீர், காற்று போன்றவற்றை பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதால் மாசுபடுதல் குறைவாக உள்ளது. ஆனால், அவ்வகையில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு இயற்கை சரியாக ஒத்துழைக்காததால் நம்பகத்தன்மை இல்லாமல் உள்ளது. அதனால் எரிபொருள் கொண்டு அனல் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. அனல் மின்சாரம் தயாரிப்பது தேவையானதாக இருந்தாலும், கெடுதல் அதிகமாக உள்ளது. கட்டடங்கள் கட்ட முக்கிய தேவையான சிமெண்ட் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் இருந்து வெளிப்படும் துகள்கள் புவியை மாசுபடுத்துகிறது. இவற்றுடன் மக்கள் தொகை பெருக்கமும் இயற்கைக்கு பெரிய அச்சுறுத்தலாக உள்ளது.உலக அளவில் ஐந்து கோடி சதுர கிலோமீட்டர் பரப்பில் 33 சதவீதம் வனம் இருந்தது. அதில், தற்போது 10 லட்சம் சதுர கிலோமீட்டர் வனம் அழிக்கப்பட்டுள்ளது. ஆனைமலை புலிகள் காப்பகத்தில் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயர்கள் வனப்பகுதியை அழித்து தேயிலை, காபி பயிரிட்டனர். சுதந்திரத்திற்கு பிறகும் நம்மவர்கள் வனத்தை கொஞ்சம் கொஞ்சமாக அழித்து எஸ்டேட் களாக மாற்றி வருகின்றனர்.இந்தியாவில் 2.2 சதவீதம் வனம் அழிக்கப் பட்டுள்ளது. இந்நிலையில் 17 சதவீதம் மக்கள் தொகை அதிகரித்துள்ளது. இதனால் இயற்கைக்கு பங்கம் ஏற்பட்டுள்ளது.ஒவ்வொரு ஆண்டும் இரண்டு சென்டிகிரேட் வெப்பம் அதிகரித்து வருகிறது. இன்னும் இரண்டு சென்டிகிரேட்

வெப்பம் அதிகரித்தால் அழிவுப்பாதையை நோக்கி சென்று விடுவோம். புழு, பூச்சி, பறவைகள், வனவிலங்குகள் அனைத்தும் அழிந்து விடும். மழை, காற்று போன்றவற்றின் பருவ நிலை மாறி விடும். இந்த விளைவுகளில் இருந்து நம்மை காத்துக்கொள்ள மரம் வளர்ப்பதே சிறந்த வழியாகும்.இவ்வாறு, வனத்துறை அமைச்சர் பேசினார்.கல்லூரி செயலாளர் கனகரத்தினம் நன்றி கூறினார்.

"மரங்களை நம்பி மனிதர்கள்'வனத்துறை அமைச்சர் செல்வராஜ் பேசுகையில், ""மனிதனையும் மரத்தையும் பிரிக்க முடியாது. மனிதன் சுவாசித்து விடும், காற்றை சுவரித்து உயிர்வாழ்பவை மரங்கள். மரங்கள் சுவாசித்து விடும் காற்றை நம்பி வாழ்பவர்கள் மனிதர்கள். குழந்தை பிறந்ததும் தொட்டில் கட்டவும், நடந்து பழகுவதற்கு நடைவண்டியாகவும், பள்ளி பருவத்தில் மேஜை, நாற்காலியாகவும், வீட்டில் கட்டிலாகவும், கதவாகவும், ஜன்னலாகவும், தள்ளாத வயதில் ஊன்றுகோலாகவும், கடைசியில் காட்டுக்கு போகும் போது பாடையாகவும் வருவது மரம் மட்டுமே. அதனால், குழந்தை பிறந்ததும் அதற்காக ஒரு மரத்தையும் வளருங்கள்'' என்று உருக்கமாக பேசினார்.

**விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்த உதவும் உழவர் மன்றங்கள்**

ராஜபாளையம்: ""விவசாயிகளின் வாழ்க் கைத் தரத்தை உயர்த்துவதற்கு உழவர் மன்றங்கள் உதவும்'' என நபார்டு வங்கி விருதுநகர் மேலாளர் தெரிவித்தார். ராஜபாளையம் தொழில் வர்த்தக சங்க கட்டட வளாகத்தில் புதுப் பாளையம் உழவர் மன்ற துவக்க விழா நடந்தது. விருதுநகர் நபார்டு வங்கி மேலாளர் மணிவண்ணன் துவக்கி வைத்து பேசியதாவது: நாட்டின் 60 சதவீதமானோர் விவசாயப் பணிகளை சார்ந்து உள்ளனர். அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்தால் தான், நாட்டின் பொருளாதாரம் முன்னேறும். தொழிலாளர்களின் முன்னேற்றத் திற்கு இது போன்ற உழவர் மன்றங்கள் பெரிய அளவில் பங்காற்றுகின்றன. விருதுநகர் மாவட்டத்தில் தற்போது வரை 110 உழவர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தியா முழுவதும் 50 ஆயிரம் உழவர் மன்றங்களை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு மன்றத்திலும் 20 பேர் உறுப்பினர்களாக இருப்பர். விவசாயிகளது சந்தேகங்களை போக்க வல்லுனர்களின் ஆலோசனைகள், மாதிரி பண்ணைகளில் நேரடியாக களப்பயிற்சி பெறுதல், விவசாயிகளுக்கான அரசின் நலத் திட்டங்கள், மானியங்கள் குறித்து தெரிந்து கொள்ளுதல் போன்ற பணிகளை இக்குழு அமைப்பதன் மூலம் எளிதாக மேற் கொள்ள முடியும், என்றார். பருத்தி ஆராய்ச்சி மைய தலைவர் முருகேசன், தரணி சர்க்கரை ஆலை மேலாளர் சுந்தரராஜன், விவசாய உதவி இயக்குனர் தனசேகரன், புதுப்பாளையம் உழவர் மன்ற பொருளாளர் ராமச்சந்திர ராஜா நன்றி கூறினார்.

**விவசாயிகள் நீண்ட கால கோரிக்கைக்கு விடிவு ஸ்ரீவைகுண்டத்தில் வாழைக்காய் பதப்படுத்தும் நிலையம்**

தூத்துக்குடி: ஸ்ரீவைகுண்டத்தில் வாழைக்காய் பதப்படுத்தும் குளிரூட்டும் நிலையம் 30 லட்சத்தில் அமைக்கப்படுகிறது. இதன் மூலம் விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கைக்கு விடிவு ஏற்பட்டுள்ளது.தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் சுமார் 2 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் வாழைகள் நடவு செய்யப்படுகிறது. இந்த வாழைகள் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

அதிகமான வாழைத்தார் வரத்து காலத்தில் விவசாயிகளுக்கு போதிய விலை கிடைக்காத நிலை ஏற்பட்டது. ஆனால் வாழைத்தாரை இருப்பு வைப்பதற்கு குளிர்பதன கிடங்கு எதுவும் இல்லாததால் அதனை இருப்பு வைக்க முடியாத நிலை ஏற்பட்டு வந்தது.இதனால் அதிக வாழைத்தார் வரும் காலத்தில் குறைவான விலைக்கு அதனை விவசாயிகள் விற்பனை செய்ய வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டு வந்தது. இதனால் மிக அதிகமாக வாழை உற்பத்தியாகும் ஸ்ரீவைகுண்டத்தில் குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கை தற்போது நிறைவேற உள்ளது. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 30 லட்ச ரூபாய் செலவில் ஸ்ரீவைகுண்டத்தில் வாழைக்காய் பதப்படுத்தும் நிலையம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசின் பரிசீலனையில் உள்ள இதற்கு மிக விரைவில் அனுமதி வந்துவிடும் என்று வேளாண்மை விற்பனைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.வாழைக்காய் பதப்படுத்தும் நிலையம் ஸ்ரீவைகுண்டத்தில் அமையும் போது அந்த பகுதி வாழை விவசாயிகள் விலை குறைவான நேரத்தில் குளிர்பதன கிடங்கு அமைக்கப்படுவதன் மூலம் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வந்த விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**கொப்பரை கொள்முதல் மீண்டும் துவங்கியது**

பல்லடம் : கடந்த 12 நாட்களுக்கு பின், பல்லடத்தில் உள்ள அரசு கொப்பரை கொள்முதல் மையத்தில் மீண்டும் கொப்பரை கொள்முதல் நேற்று துவங்கியது; நூற்றுக்கும் மேற்பட்ட மூட்டை கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டது.

விவசாயிகளிடம் இருந்து பல்லடம் கொப்பரை கொள்முதல் மையத்தில் புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று நாட்கள் கொப்பரை கொள்முதல் செய்யப் படுகிறது. ஒரு கிலோ கொப்பரை கொள்முதல் விலை 44.50 ரூபாய். இங்கு கொள்முதல் செய்யப்படும் கொப்பரை, தெற்குபாளையம், திருப்பூர் அங்கேரிபாளையம், அவிநாசி ஆகிய இடங்களில் உள்ள அரசு சேமிப்பு கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு வந்தன.மேற்கண்ட சேமிப்பு கிடங்கு களில் இருப்பு வைக்க போதிய இட வசதி இல்லாத காரணத்தால், கடந்த 4ம் தேதி பல்லடம் கொள் முதல் மையத்தில் கொப்பரை கொள்முதல் நிறுத்தப்பட்டது. திடீரென கொள்முதல் நிறுத்தம் செய்யப்பட்டதால், கொப்பரை உற்பத்தி விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர். அரசு கொள்முதல் விலையை விட, கிலோவுக்கு 10 ரூபாய் குறைவு என்ற போதிலும், அவசர பணத்தேவையை கருத்தில் கொண்டு, சில விவசாயிகள், வெளி மார்க்கெட்டில் கொப்பரைகளை விற்பனை செய்தனர்.

கோவை சித்தாப்புதூர் சேமிப்பு கிடங்கில் கொப்பரை இருப்பு வைக்க போதிய இட வசதியிருப் பதை அறிந்து, பல்லடம் கொப்பரை கொள்முதல் அதிகாரிகள், 12 நாட்களுக்கு பின் நேற்று மீண்டும் பல்லடத்தில் கொப்பரை கொள்முதலை துவக்கினர். நேற்று ஒரு நாள் மட்டும் 100க்கும் மேற்பட்ட மூட்டைகள் விவசாயிகளிடம் இருந்து கொள் முதல் செய்யப் பட்டு, சித்தாப்புதூர் சேமிப்பு கிடங்கிற்கு கொண்டு செல்லப் பட்டன.

இதுகுறித்து கொப்பரை உற்பத்தி விவசாயிகள் கூறியதாவது: பல்லடம், செஞ்சேரியில் உள்ள அரசு மையங்களில் கொள்முதல் செய்யப்படும் கொப்பரைகளை இருப்பு வைக்க போதிய இட வசதியில்லை என காரணம் கூறி, அடிக்கடி கொள்முதல் நிறுத்தப் படுகிறது. காங்கயம், வெள்ளக் கோவிலில் உள்ள வெளிமார்க் கெட்டில் கொப்பரை கொள்முதல் விலை, அரசு மையத்தை விட, கிலோவுக்கு 10 ரூபாய் குறைவு என்பதால், வெளிமார்க்கெட்டில் விற்பனை செய்ய ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால், அரசு மையங்களில் அடிக்கடி கொள்முதல் நிறுத்தம் செய்யப்படுவதால் கடும் பாதிப்பு ஏற்படுகிறது. இருப்பு வைப்பதற் கான இட வசதியை காரணம் காட்டி, அடிக்கடி கொப்பரை கொள்முதல் நிறுத்தம் செய்யப் படுவதை களைய, அரசு உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *நடப்பு பருவத்தில் நாட்டின் பருத்தி உற்பத்தி 3 கோடி பொதிகளாக உயரும்*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*மும்பை*
*நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி 3.06 கோடி பொதிகளாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில் பருத்தி உற்பத்தி 2.91 கோடி பொதிகளாக இருந்தது என இந்திய பருத்தி சங்கம் தெரிவித்துள்ளது. ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தியை கொண்டதாகும். சென்ற ஆண்டை விட, நடப்பு ஆண்டில், நாட்டின் பருத்தி உற்பத்தி சுமார் 1.50 லட்சம் பொதிகள் அதிகமாக இருக்கும் என பருத்தி சங்கத்தின் மே மாத மதிப்பீட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.*
*கையிருப்பில் உள்ள பருத்தி பொதிகளையும் சேர்த்து, பயன்பாட்டிற்கு 3.87 கோடி பருத்தி பொதிகள் கிடைக்கும். இதில் உள்நாட்டு பயன்பாட்டிற்கு 2.50 கோடி பருத்தி பொதிகள் தேவைப்படும். இதுபோக, உபரியாக 1.37 கோடி பருத்தி பொதிகள் இருக்கும்.*
*ஏற்றுமதி*
*இதனையடுத்து, நடப்பு பருத்தி பருவத்தில், 82 லட்சம் பொதிகள் ஏற்றுமதியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் மொத்த உற்பத்தியில், உள்நாட்டு பயன்பாடு மற்றும் ஏற்றுமதி போக, 52 லட்சம் பொதிகள் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது. நாட்டின் பருத்தி உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதனால், பருத்தி உற்பத்தியும், சாகுபடி பரப்பளவும் அதிகரித்து வருவதாக இத்துறையை சேர்ந்த ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.*

## உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16.12%–ஆக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
உணவு பொருள்களுக்கான பணவீக்கம், ஜுன் 5–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 16.12 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 16.74 சதவீதமாக இருந்தது.
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், பழங்கள், காய்கறிகள், தேயிலை போன்றவற்றின் விலை குறைந்திருந்தது. குறிப்பாக, பழங்கள் மற்றும் காய்கறிகளின் விலை 6 சதவீதமும், தேயிலையின் விலை 2 சதவீதமும் குறைந்திருந்தது. அதேசமயம், உளுந்து (6%), மக்காச்சோளம், கம்பு (தலா 1%) உள்ளிட்ட ஒரு சில தானியங்களின் விலை சற்று உயர்ந்திருந்தது.
மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் ஒட்டுமொத்த பணவீக்க விகிதம், சென்ற மே மாதத்தில் 10.16 சதவீதமாக அதிகரித்திருந்தது. அதேசமயம், நடப்பு ஆண்டு மார்ச் மாதத்தில் பணவீக்கம் 11.04 சதவீதம் என்ற அளவில் மிகவும் அதிகரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## மழையினால் நீர்மட்டம் உயர்வு 2 நாட்களுக்கு ஒருமுறை சிறுவாணி குடிநீர் மாநகராட்சி கமிஷனர் தகவல்

கோவை,ஜுன்.18–
சிறுவாணி குடிநீர் வினியோகம் செய்யப்படும் பகுதிகளில் 4 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் என்ற நிலைமையை மாற்றி 2 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வினியோகம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.
நீர்மட்டம் உயர்வு
கோவை நகருக்கு சிறுவாணி மற்றும் பில்லூர் அணைகளில் இருந்து குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. கோடைகாலத்தில் சிறுவாணி அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்தது. இதைத்தொடர்ந்து சிறுவாணி குடிநீர் வினியோகம் செய்யப்படும் பகுதிகளில் 4 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு

*வந்தது.*
*இந்தநிலையில் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால், சிறுவாணி அணைக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்து வருகிறது. சிறுவாணியின் மொத்த நீர்மட்டம் 878.5 மீட்டர் ஆகும். நேற்றைய அணையின் நீர்மட்டம் 869.3 மீட்டராக உள்ளது.*
*2 நாட்களுக்கு ஒருமுறை*
*மாநகராட்சி கமிஷனர் அன்சுல்மிஸ்ரா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–*
*சிறுவாணி அணையின் நீர்பிடிப்பு பகுதியில் கடந்த வாரம் போதுமான அளவு மழை பெய்துள்ளதால், கணிசமான அளவுக்கு மழைநீர் கிடைத்துள்ளது. கோவை மாநகராட்சிக்குட்பட்ட சிறுவாணி குடிநீர் வினியோகிக்கப்படும் பகுதிகளில் இனி 2 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழக்கம்போல் வினியோகிக்கப்படும். இதுஉடனடியாக அமல்படுத்தப்படுகிறது*
*இவ்வாறு மாநகராட்சி கமிஷனர் அன்சுல் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.*
*பில்லூர் அணையில் இருந்து கோவை கிழக்குப்பகுதியான சிங்காநல்லூர் உள்பட பல்வேறு பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பகுதிகளிலும் கூடுதலாக குடிநீர் வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த பகுதி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*